ஞானத்தலைவன் துணை

கந்தர் அலங்காரம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்
263-வது ஆண்டு நினைவு வெளியீடு

23—5—1951

ஸ்ரீ காசி மடம் திருப்பனந்தாள்

1951

புத்தக விளம்பரம்

			ரூ.	அ.
1	விநாயகர் திருமுறை	...	0	1
2	குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு — டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன்	...	6	0
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ,,	...	2	8
4	மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் ,,	...	1	0
5	முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் ,,	...	1	0
6	சிதம்பரச் செய்யுட்கோவை ,,	...	0	12
7	கந்தர் கலிவெண்பா — ஆங்கிலம், ஹிந்து மொழி பெயர்ப்புக்களுடன்	...	6	0
8	கந்தர் கலிவெண்பா—மூலம் மட்டும்	...	0	1
9	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	...	0	4
10	கந்தரனுபூதி ,,	...	0	2
11	அபிராமி அந்தாதி—கி. வா. ஜ. குறிப்புரையுடன்	...	0	12
12	சிவஞான சித்தியார் — ஆங்கிலம், ஹிந்தி மொழி பெயர்ப்புக்களுடன்	...	5	0
13	ஷை ஹிந்து மட்டும்	...	1	0
14	கந்தர் கலிவெண்பா—திரு. பட்டுச்சாமி ஓதுவார் உரையுடன்	...	0	6

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடு

உ

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ அருணகிரிநாதர்

அருளிச்செய்த

கந்தர் அலங்காரம்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்துத் தலைவராக
எழுந்தருளியிருக்கும்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களுடைய திருவுள்ளப்படி
வெளியிடப்பெற்றது

பதிப்பாசிரியர்:
T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L.,
ஸ்ரீ வைகுண்டம்

[கர ஆண்டு வைகாசித் திங்கள்–கூ-ம் நாள்]

உரிமைப் பதிவு] ★ [மே - 1951

வேண்டுகோள்

'வஞ்சகம் புரியும்அவர் அலங்கார வறும்புகழ்
வேண்டிலேன் ; வேண்டும்
வரம்பெறும் அருண கிரிநினை முன்னாள்
வழுத்தலங் காரமும் புகழும்.'

— தணிகை சந்நிதி முறை - கலம்பகம்.

...'வேலர்
அலங்காரத் துட்பொருளை யாய்வதுவே தேகங்
கலங்கா வலங்காரம் என்றும்'

— தணிகையுலா.

பதிப்புரை

'கந்தர் அநுபூதி பெற்றுக் கந்தர் அநுபூதி சொன்ன எந்தை' ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய நூல்களில் **கந்தர் அலங்காரமும்** ஒன்றாகும். (அலங்காரம் - அழகு; சிறப்பு) இந்நூல், **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களின் திருவுளக் கருத்திற்கேற்ப **ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகள்** அவர்களின் 263-வது ஆண்டு நினைவு வெளியீடாக இந்நன்னாளில் வெளி வருகின்றது.

சைவமும் தமிழும் தழைத்தோங்க ஆவன செய்துவரும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்கள், உலகோர் ஸ்ரீ முருகப் பெருமான் திருவருள் பெற்றுய்யுமாறு இந்நூலினைக் குறிப்புரையுடன் பதிப்பிக்கும்படி அடியேனுக்குக் கட்டளையிட்டருளிய பெருங்கருணையை எண்ணி மகிழ்ந்து, அவர்களின் பொன்னார் திருவடிகளை வழுத்துகின்றேன்.

ஸ்ரீவைகுண்டம்
23—5—'51

இங்ஙனம்,
T. M. குமரகுருபரன் பிள்ளை B.A., B.L.

ஸ்ரீ அருணகிரிநாதர் வரலாறு

"கருணைக்கு அருணகிரி" எனப் போற்றும் ஸ்ரீ அருணகிரிநாதர் திருவண்ணாமலையில் தோன்றிய பெரியார் ஆவர். இவர் ஸ்ரீ முருகப் பெருமானால் ஆட்கொள்ளப்பெற்று மெய்ஞ்ஞானம் உற்றவர்; ஸ்ரீ முருகக் கடவுளைச் சந்தம் மலிந்த திருப்புகழ் என்னும் பாடல்களால் துதித்து வழிபட்டவர்.

இவர் பிரபுட தேவராசன் என்னும் சிற்றரசனால் போற்றப் பெற்றவர். சம்பந்தாண்டானுடன் வாதிட்டபொழுது ஸ்ரீ முருகப் பெருமானை யாவருங் காண நேரில் வரவழைத்துக் காட்டிய பேரன்பர். கிளியின் உடலில் புகுந்து விண்ணுலகஞ் சென்று பாரிஜாதப் பூவைக் கொண்டுவந்தவர் என்றும், தன் உடல் அழிவுற்றதை அறிந்து கிளி உருவிலே இருந்து கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, திருவகுப்பு என்னும் நூல்களைப் பாடி முருகன் அருளைப் பெற்றவர் என்றும், ஒரு புரட்டாசி மாதத்து உத்தர நட்சத்திரத்தில் முருகன் திருவடியினை அடைந்தவர் என்றும் வரலாறு கூறும்.

இவர் காலம் கி. பி. 15-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும் என்பர்.

செந்திலாண்டவன் துணை

ஸ்ரீ அருணகிரிநாதர்

அருளிச்செய்த

கந்தர் அலங்காரம்

காப்பு

அடல்அரு ணைத்திருக் கோபுரத்
தேஅந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண்
டேன்;வருவார் தலையில்
தடபடெனப்படு குட்டுடன்
சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக்
கிளைய களிற்றினையே.

காப்பு—அருணை - திருவண்ணாமலை. கடம் - மதம். தட - பெரிய. கும்பம் - மத்தகம். களிறு - யானை; விநாயகர். இளைய களிறு - முருகன்.

நூல்

பேற்றைத் தவம்சற்றும் இல்லாத
என்னைப்ர பஞ்சம்என்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட
வா;செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத்
தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான்
குமாரன்க்ரு பாகரனே. 1

அழித்துப் பிறக்கவொட் டாஅயில்
வேலன் கவியைஅன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி
லீர்;எரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங்
கூற்றன் விடுங்கயிற்றால்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன்
றோ?கவி கற்கின்றதே. 2

---

1 சடாடவி - சடைக்காடு. பணி - பாம்பு. இதழி - கொன்றை. அம்புலி - சந்திரன். 2 அயில் - கூர்மை. வேலன் கவி - முருகன் புகழ் நூல்கள்.

தேரணி யிட்டுப் புரம்எரித்
தான்மகன் செங்கையில்வேல்
கூரணி யிட்டணு வாகிக்
கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த
கடக நெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது; தேவேந்த்ர
லோகம் பிழைத்ததுவே. 3

ஓரவொட் டார்ஒன்றை உன்னஒட்
டார்மலர் இட்டுனதாள்
சேரவொட் டார்ஐவர் செய்வதென்?
யான்சென்று தேவர்உய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக்
காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோர்இமைப்
போதினில் கொன்றவனே. 4

---

3 கூரணியிட்டு - பொருந்த நெருங்கி. கடகம் - சேனை. சூர் - சூரபதுமன். பேரணி - சேனை. 4 ஐவர் - பஞ்சேந்திரியங்கள். சோரி - இரத்தம். கூர - கூர்மையுடைய. கட்டாரி - வேல்.

திருந்தப் புவனங்கள் ஈன்றபொற்
பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில்
ஏறி அறுவர்கொங்கை
விரும்பிக் கடல்அழக் குன்றழச்
சூரழ விம்மிஅழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவன்என்
றோதும்; குவலயமே, 5

பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல்
காக்கின்ற பேதைகொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்
பினால்மெல்ல மெல்லவுள்ள
அரும்பும் தனிப்பர மானந்தம்
தித்தித் தறிந்த அன்றே
கரும்பும் துவர்த்துச்செந் தேனும்
புளித்தறக் கைத்ததுவே. 6

---

5 அறுவர் - கார்த்திகை மாதர் அறுவர். குருந்து - குழந்தை. குறிஞ்சிக் கிழவன் - மலை நாட்டிற்குரிய கடவுள். 6 ஏனல் - தினை. பேதை - வள்ளியம்மையார். அரும்பும் - தோன்றுகிற.

சளத்திற் பிணிபட்ட சட்டுக்
    ரியைக்குள் தவிக்கும்என் றன்
உளத்தில் ப்ரமத்தைத் தவிர்ப்பாய்;
    அவுணர் உரத்துதிரக்
குளத்தில் குதித்துக் குளித்துக்
    களித்துக் குடித்துவெற்றிக்
களத்தில் செருக்கிக் கழுதாட
    வேல்தொட்ட காவலனே. 7

ஒளியில் விளைந்த உயர்ஞான
    பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொர் ஆனந்தத்
    தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப்
    பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வா; முகம்
    ஆறுடைத் தேசிகனே. 8

---

7 சளத்தில் - உடலில். அசட்டுக் கிரியை - உலக விவகாரம். ப்ரமம் - மயக்கம். கழுது - பேய். 8 பூதரம் - மலை. அளி - அன்பு. வெறுந்தனி - சுத்த தனி நிலை; முத்தி நிலை.

தேன்என்று பாகென் றுவமிக்கொ
ணாமொழித் தெய்வவள்ளி
கோன்அன் றெனக்குப தேசித்த
தொன்றுண்டு ; கூறவற்றோ ?
வான்அன்று கால்அன்று தீஅன்று
நீர்அன்று மண்ணும்அன்று
தான்அன்று நானன் றசரீரி
அன்று சரீரிஅன்றே. 9

சொல்லுகைக் கில்லைஎன் றெல்லாம்
இழந்துசும்மா இருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்ட
வா; இகல் வேலன் நல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக்
கல்வரை கொவ்வைச்செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத்
தோள்அண்ணல் வல்லபமே. 10

---

9 கூறவற்றோ - (இன்னதென்று) கூறவல்லதோ? அல்ல. கால் - காற்று. அசரீரி - உருவமில்லாதது. சரீரி - உருவமுடையது. 10 விட்டவா - விட்டவாறு. கல்வரை - மலை. கொல்லி - ஒருபண்.

குசைநெகி ழாவெற்றி வேலோன்
அவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட
வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது
மேரு அடியிடஎண்
திசைவரை தூள்பட்ட அத்தூளின்
வாரி திடர்பட்டதே. 11

படைபட்ட வேலவன் பால்வந்த
வாகைப் பதாகைஎன்னும்
தடைபட்ட சேவல் சிறகடிக்
கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாகம்
உதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமும் மாமேரு
வெற்பும் இடிபட்டவே. 12

---

11 குசை - கடிவாளம். கசை - சாட்டை. வாரி-கடல். திடர் - மேடு. 12 படைபட்ட - படையாகப் பொருந்திய. வாகைப் பதாகை - வெற்றிக் கொடி. சலதி - கடல். உடு - நட்சத்திரம்.

ஒருவரைப் பங்கில் உடையாள்
குமாரன் உடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி ஓசை
படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட்
டெட்டுவெற் பும்கனகப்
பருவரைக் குன்றம் அதிர்ந்தன
தேவர் பயங்கெட்டதே. 13

குப்பாச வாழ்க்கையுள் கூத்தாடும்
ஐவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்று
வாய்; இரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங்
குலுங்கவிண் ணோரும்உய்யச்
சப்பாணி கொட்டிய கையா
றிரண்டுடைச் சண்முகனே. 14

---

13 ஒருவர் - சிவபெருமான். உடையாள் - உமை. கிண்கிணி - ஓர் ஆபரணம். கனகப் பருவரை - மேரு மலை. 14 குப்பாச வாழ்க்கை - சிறிய பாச வாழ்வு. கொட்பு - சுழற்சி.

தாவடி ஓட்டு மயிலிலும்
தேவர் தலையிலும்என்
பாவடி ஏட்டிலும் பட்டதன்
றோ?படி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட
கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான்
மருகன்றன் சிற்றடியே. 15

தடுங்கோள் மனத்தை விடுங்கோள்
வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோள் இருந்த படி இருங்
கோள்எழு பாரும்உய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றம்
திறக்கத் துளைக்கவைவேல்
விடுங்கோன் அருள்வந்து தானே
உமக்கு வெளிப்படுமே. 16

---

15 தாவடி - போர். படி - உலகம். மாவலி - மஹாபலி. மூது அண்ட கூடம் - முதிய அண்ட கோளம். முகடு - உச்சி. 16 வெகுளி - கோபம். குன்றம் - கிரௌஞ்சம். வை - கூர்மை.

வேதா கமசித்ர வேலா
யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்தம் அரணாக
அல்லும் பகலும்இல்லாச்
சூதான தற்ற வெளிக்கே
ஒளித்துச்சும் மாஇருக்கப்
போதாய்; இனிமன மே! தெரி
யாதொரு பூதர்க்குமே. 17

வையில் கதிர்வடி வேலோனை
வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யில் பிளவள வேனும்
பகிர்மின்கள்; நுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க உதவா
உடம்பின் வெறுநிழல்போல்
கையில் பொருளும் உதவாது
காணும் கடைவழிக்கே. 18

---

17 அல் - இரவு. வெளி - ஞானப் பெருவெளி. பூதர் - பஞ்சபூதப் பற்றுடையவர். 18 வையில்-பூமியில். பகிர்மின்கள் - பகுத்துக் கொடுங்கள். கடை வழி - மரணத்தின் பின் உயிர் செல்லும் வழி.

சொன்ன கிரௌஞ்ச கிரியூ
டுருவத் துளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை
மார்பமௌ னத்தையுற்று
நின்னை உணர்ந்துணர்ந் தெல்லாம்
ஒருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேன்;இறந்
தேவிட்ட திவ்வுடம்பே. 19

கோழிக் கொடியன் அடிபணி
யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதியிலி
காள்!உங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி உண்ணஒட்
டாதுங்கள் அத்தம்எல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு
மோ?நும் அடிப்பிறகே. 20

---

19 சொன்ன - சொர்ண, பொன் மயமான. கடம்பு - ஒரு மரம். இறந்தேவிட்ட திவ்வுடம்பு - இவ்வுடம்பு இறந்தது போன்றதாயிற்று. 20 ஊழிற் பெருவலி - ஊழ்வினை. அத்தம் - செல்வம்.

மரணப்ர மாத நமக்கில்லை;
யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலும்உண்
டே;கிங் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி
மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞான
கரசுர பாஸ்கரனே, 21

மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழால்
வைதாரையும் அங்கு வாழவைப்
போன்;வெய்ய வாரணம்போல்
கைதான் இருப துடையான்
தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள்
பயந்த இலஞ்சியமே. 22

---

21 கிரணக்கலாபி-மயில். முகுள சரண - அரும்பு போல் அணி செய்யும் பாதத்தை யுடையவனே. சசி தேவி-இந்திராணி. பாஸ்கரன்-சூரியன். 22 வாரணம்-யானை. இலஞ்சியமே - தடாகத்தில் உதித்தவனே.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
வாழுஞ் செழுஞ்சுடரே !
வைவைத்த வேற்படை வானவ
னே ! மற வேன் உனை நான் ;
ஐவர்க் கிடம்பெறக் கால்இரண்
டோட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்
னேவந்து காத்தருளே. 23

கின்னங் குறித்தடி யேன்செவி
நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி
விட்டது ; கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக்
கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியில் சென்றுகல்
யாண முயன்றவனே. 24

---

23 செங்கோடு - திருச்செங்கோடு. வை-கூர்மை. வீடு - உடல். 24 கின்னம் - துன்பம். குன்னம் - இரகசியம், உபதேசம். கோடு - ஊது கொம்பு. சின்னம் - சங்கு. குறிச்சி - வள்ளிமலை- சிறுமி - வள்ளி.

தண்டா யுதமுந் திருசூல
மும்விழத் தாக்கிஉன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு
வேன் ; செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியஎன் அவிரோத
ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாஅந்த கா! வந்து
பார்சற்றென் கைக்கெட்டவே. 25

நீலச் சிகண்டியில் ஏறும்
பிரான்எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன்வரு
வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி
வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார் ;மரிப்
பார்வெறுங் கர்மிகளே. 26

---

25 செந்தில் - திருச்செந்தூர். தொண்டாகிய... வாள் - திருவடி ஞானமாகிய வாள் 26 சிகண்டி-மயில். குருநாதன் - முருகன். சீலத்தை-உபதேச மொழியை. காலம் - பிறப்பு.

ஓலையுந் தூதருங் கண்டுதிண்
டாடல் ஒழித்தெனக்குக்
காலையும் மாலையும் முன்னிற்கு
மே;கந்த வேள்மருங்கில்
சேலையுங் கட்டிய சீராவுங்
கையில் சிவந்தசெச்சை
மாலையுஞ் சேவல் பாதகையுந்
தோகையும் வாகையுமே. 27

வேலே விளங்குகை யான்செய்ய
தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொள இங்ஙன் காண்பதல்
லால்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதாய்
அருவுரு வாகிஒன் று
போலே இருக்கும் பொருளை எவ்
வாறு ? புகல்வதுவே. 28

---

27 தூதர் - யமதூதர். சீரா - அரைக் கச்சை; உடைவாளுமாம். செச்சை மாலை - வெட்சி மாலை. 28 மாலே கொள - (அன்பாகிய) மயக்கமே மிக. பொருள் - கடவுள்.

கடத்தில் குறத்தி பிரான்அரு
ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந்
தேன்;சித்ர மாதர்அல்குல்
படத்தில் கழுத்தில் பழுத்தசெவ்
வாயில் பணையில்உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும்வெங்
காம சமுத்திரமே. 29

பால்என் பதுமொழி பஞ்சென்
பதுபதம் பாவையர்கண்
சேல்என்ப தாகத் திரிகின்ற
நீசெந்தி லோன்திருக்கை
வேல்என் கிலை;கொற் றமயூரம்
என்கிலை; வெட்சித்தண்டைக்
கால்என் கிலை;மன மே!எங்ஙன்
னே?முத்தி காண்பதுவே. 30

---

29 கடத்தில் - மலைப் பக்கத்தில். திடம் - உறுதி. புணை - தெப்பம். பணை - மூங்கில்; இங்குத் தோள். 30 பதம் - கால். சேல் என்பதாக - சேல்மீன் போன்றது என்பதாக. மயூரம் - மயில்.

பொக்கக் குடிலில் புகுதா
வகைப்புண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்விடு
தந்தருள் ; சிந்துவெந்து.
கொக்குத் தறிபட் டெறிபட்
டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர்
வேல்தொட்ட காவலனே. 31

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார்
புடன்கிரி யூடுருவத்
துளைத்துப் புறப்பட்ட வேற்கந்த
னே ! துறந் தோர்உளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப்
பதைக்க வதைக்குங்கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னைஎந்
நாள்வந் திரட்சிப்பையே. 32

---

31 பொக்கக் குடில் - பொய் வீடாகிய உடல். சிந்து - கடல். கொக்கு - மாமரம்; இங்குச் சூரபதுமன். கிரி - கிரௌஞ்சமலை. 32 கிளைத்து - கிளைகளையுடைய மாமரமாக. சூர் - சூரபதுமன்.

முடியாப் பிறவிக் கடலில்
புகார்;முழு துங்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்
படார்;வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள்
அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு
நாமம் புகல்பவரே. 33

பொட்டாக வெற்பைப் பொருதகந்
தா! தப்பிப் போனதொன் றற்
கெட்டாத ஞான கலைதரு
வாய்;இருங் காமவிடாய்ப்
பட்டார் உயிரைத் திருகிப்
பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக்
கேமனங் கட்டுண்டதே. 34

---

33 மிடி - வறுமை. படி - உலகம். விதனம் - துன்பம். 34 பொட்டாக - தொளையுண்டாக. வெற்பு - மலை - கிரௌஞ்சமலை. ஞான கலை தருவாய் - பதி ஞானத்தைத் தருவாய்.

பத்தித் துறைஇழிந் தானந்த
வாரி படிவதனால்
புத்தித் தரங்கம் தெளிவதென்
றோ?பொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ
ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா
வதிகொண்ட கொற்றவனே. 35

சுழித்தோடும் ஆற்றிற் பெருக்கா
னதுசெல்வந் துன்பம்இன்பம்
சுழித்தோடு கின்றதெக் காலநெஞ்
சே!கரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோடன்
என்கிலை; குன்றம்எட்டுங்
கிழித்தோடு வேல்என் கிலை;எங்ங
னே?முத்தி கிட்டுவதே. 36

---

35 வாரி - கடல். புத்தித் தரங்கம் - அந்தக்கரண அலைகள். சுட்டியிலே - நெற்றியிலே. தரம் - வலிமை. அமராவதி - தேவலோகம். 36 கரிக்கோட்டு முத்து - யானைத் தந்தத்திலிருந்து தோன்றும் முத்து.

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர்
காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மற
வேன் ; முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டுடு
டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெம்
சூர்க்கொன்ற ராவுத்தனே. 37

நாள்என் செயும் ; வினை தான்என்
செயும் ; எனை நாடிவந்த
கோள்என் செயும் ; கொடுங் கூற்றென்
செயும் ; குமரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே. 38

---

37 கண்டு உண்ட-கற்கண்டை உண்டது போன்ற இனிமையுடைய. கூளித்திரள் - பேய்க் கூட்டம். ராவுத்தன் - குதிரைச் சேவகன். 38 நாள் - கிழமை; நட்சத்திரம். கோள் - நவக்கிரகம்.

உதித்தாங் குழல்வதும் சாவதும்
தீர்த்தெனை உன்னில்ஒன்று
விதித்தாண் டருள்தருங் காலம்உண்
டோ? வெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம்
பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு காமயில்
ஏறிய மாணிக்கமே. 39

சேல்பட் டழிந்தது செந்தூர்
வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி
யார்மனம் மாமயிலோன்,
வேல்பட் டழிந்தது வேலையும்
சூரனும் வெற்பும்அவன்
கால்பட் டழிந்ததிங் கென்தலை
மேல்அயன் கையெழுத்தே. 40

---

39 வெற்பு - மந்தரமலை. உரகபதி - வாசுகி. தாம்பு - கயிறு. அம்பரம் - பாற்கடல். மதித்தான் - திருமால். 40 சேலபட்டு - சேல் மீன்கள் குதித்து மோதி. வேலை - கடல். அயன் - பிரமன்.

பாலே அனைய மொழியார்தம்
இன்பத்தைப் பற்றிஎன்றும்
மாலேகொண் டுய்யும் வகையறி
யேன் ; மலர்த் தாள்தருவாய் ;
காலே மிகவுண்டு காலே
இலாத கண பணத்தின்
மேலே துயில்கொள்ளும் மாலோன்
மருக ! செவ் வேலவனே. 41

நிணங்காட்டும் கொட்டிலை விட்டொரு
வீடெய்தி நிற்கநிற்கும்
குணங்காட்டி ஆண்ட குருதே
சிகன் நம் குறச்சிறுமான்
பணங்காட்டும் அல்குற் குருகும்
குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே
எனக்கிங்ஙன் வாய்த்ததுவே. 42

---

41 மாலே - மயக்கமே. காலே - காற்றையே. கண பணம் - கூட்டமான படங்கள்; பல தலைகளை யுடைய ஆதிசேடன். 42 நிணம் காட்டும் கொட்டில் - தசையால் எழுப்பிய வீடு - உடல்.

கவியால் கடல்அடைத் தோன்மரு
　　கோனைக் கணபணக்கட்
செவியால் பணியணி கோமான்
　　மகனைத் திறல்அரக்கர்
புவியார்ப் பெழத்தொட்ட பேர்வேல்
　　முருகனைப் போற்றிஅன்பால்
குவியாக் கரங்கள்வந் தெங்கே
　　எனக்கிங்ஙன் கூடியவே. 43

தோலால் சுவர்வைத்து நாலாறு
　　காலில் சுமத்திஇரு
காலால் எழுப்பி வளைமுது
　　கோட்டிக்கை நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு
　　மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலால் கிரிதொளைத் தோன்இரு
　　தாள்அன்றி வேறில்லையே. 44

---

43 கவியால் - குரங்குகளின் உதவியால். கட்செவி - பாம்பு. 44 நாலாறுகால் - இருபத்து நான்கு விலா எலும்புகள்; இருபத்தி நான்கு ஆன்மதத்துவமுமாம். நாற்றி - தொங்கவிட்டு. அகம் - உடல்.

ஒருபூ தரும்அறி யாத்தனி
வீட்டில் உரையுணர்வற்
றிரு ; பூத வீட்டில் இராமல்என்
றன் ; இரு கோட்டொருகைப்
பொருபூ தரம்உரித் தேகாசம்
இட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவன் நிட்டூர
சூர குலாந்தகனே. 45

நீயான ஞான விநோதந்
தனைஎன்று நீஅருள்வாய் ;
சேயான வேல்கந்த னே ! செந்தி
லாய் ! சித்ர மாதர்அல்குல்
தோயா உருகிப் பருகிப்
பெருகித் துவளும்இந்த
மாயா விநோத மநோதுக்க
மானது மாய்வதற்கே. 46

---

45 உரை உணர்வு அற்று இரு - இஃது இறைவன் கூறிய மௌனோபதேசம். பூதரம்-யானை. ஏகாசம்-போர்வை. 46 விநோதம் - திருவிளையாடல். சித்ர - அழகிய. தோயா - தோய்ந்து.

பத்தித் திருமுகம் ஆறுடன்
பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுதுகண்
டேன்; செயல் மாண்டடங்கப
புத்திக் கமலத் துருகிப்
பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர
மானந்த சாகரத்தே. 47

புத்தியை வாங்கிநின் பாதாம்
புயத்தில் புகட்டிஅன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி
லேன்; முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ?
குவடு தவிடுபடக்
குத்திய காங்கேயனே! வினை
யேற்கென் குறித்தனையே. 48

---

47 பத்தி - வரிசை. சாகரம் - கடல். 48 வாங்கி - பொறிவழி செல்லாது தடுத்து. சத்தி - வேல். குவடு - கிரௌஞ்சமலை; காங்கேயன் - கங்கையில் (சரவணப் பொய்கையில்) தோன்றியவன்; முருகன்.

சூரில் கிரியில் கதிர்வேல்
எறிந்தவன் தொண்டர்குழாம்
சாரில் கதியன்றி வேறிலை
காண் ; தண்டு தாவடிபோய்த்
தேரில் கரியில் பரியில்
திரிபவர் செல்வம்எல்லாம்
நீரில் பொறியென் றறியாத
பாவி நெடுநெஞ்சமே. 49

படிக்கும் திருப்புகழ் போற்றுவன்
கூற்றுவன் பாசத்தினுல்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சல்என்
பாய் ; பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மருகா ! கொடுஞ்
சூரன் நடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயில்
ஏறும் இராவுத்தனே. 50

---

49 கதி அன்றி - முத்தியன்றி. தண்டு தாவடி போய் - காலாட் படையுடன் போருக்குச் சென்று. நீரில் பொறி - நீர்மேல் எழுத்து. 50 பெரும்பாம்பு - காளிங்கன். பிரான் - கண்ணன். கலாபம் - மயிற்றோகை.

மலையாறு கூறெழ வேல்வாங்கி
னானை வணங்கிஅன் பின்
நிலையான மாதவஞ் செய்குமி
னோ; நும்மை நேடிவரும்
தொலையா வழிக்குப் பொதிசோறும்
உற்ற துணையும்கண் டீர்;
இலையா யினும்வெந்த தேதாயி
னும்பகிர்ந் தேற்றவர்க்கே. 51

சிகராத்ரி கூறிட்ட வேலும்செஞ்
சேவலும் செந்தமிழால்
பகர்ஆர்வம் ஈ; பணி பாசசங்
க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி
துரங்க ந்ருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப
தீர குணதுங்கனே. 52

---

51 நேடி - தேடி. பொதி சோறு - கட்டுச் சோறு. துணையும் - துணையுமாக (த் தேடிவரும்). இலை - கீரை. 52 சிகர அத்திரி - கிரௌஞ்சமலை. ஈ - தா. சங்க்ராமம் - போர். துரங்கம் - குதிரை.

வேடிச்சி கொங்கை விரும்புங்
குமரனை மெய்யன்பினால்
பாடிக் கசிந்துள்ள போதே
கொடாதவர் பாதகத்தால்
தேடிப் புதைத்துத் திருட்டில்
கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை
வீணுக்கு மாய்ப்பவரே. 53

சாகைக்கும் மீண்டு பிறக்கைக்கும்
அன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை
யே; இலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று
போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு
காமயில் வாகனனே. 54

---

53 வேடிச்சி - வள்ளி. கிலேசித்து - மனக் கலக்கத்தை யடைந்து. 54 சாகை - இறத்தல். வாகை - வெற்றி. சிலைவளைத்தோன் - கோதண்டம் என்னும் வில்லை வளைத்த இராமன் (திருமால்).

ஆங்கா ரமும்அடங் கார்ஒடுங்
கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும்
அறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ஒளிக் குள்ளே,
முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய்
வார்? யம தூதருக்கே. 55

கிழியும் படியடற் குன்றெறிந்
தோன்கவி கேட்டுருகி
இழியும் கவிகற் றிடாதிருப்
பீர்! எரி வாய்நரகக்
குழியும் துயரும் விடாய்ப்பட்க்
கூற்றுவன் ஊர்க்குச்செல்லும்
வழியும் துயரும் பகரீர்;
பகரீர் மறந்தவர்க்கே. 56

---

55 ஆங்காரம் - யான் என்னும் செருக்கு. தூங்கார் - சமாதியிலிரார். தொழும்பு - தொண்டு.
56 இழியும் கவி - பயனில்லாப் பிற நூல்கள். கற்றிடா திருப்பீர் - கற்காதீர்கள்.

பொருபிடி யும்களி றும்விளை
யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல ! சண்முக
வாஎனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண்
டிரு ; வினை யோம்இறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது ;
மாய உடம்பிதுவே. 57

நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல்
காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய
பிரான், இக்கு முல்லையுடன்
பற்றாக் கையும்வெந்து சங்க்ராம
வேளும் படவிழியால்
செற்றார்க் கினியவன், தேவேந்த்ர
லோக சிகாமணியே. 58

---

57 விளையாடும் - (தம்முள் ஊடல்கொண்டு) விளையாடும். புனச்சிறுமான் தருபிடி - வள்ளியம்மையார்.
58 இக்கு - கரும்பு; மன்மதன் வில். முல்லை - மன்மதன் பாணம். வேள் - மன்மதன்.

பொங்கார வேலையில் வேலைவிட்
டோன் அருள் போல்உதவ
எங்கா யினும்வரும் ஏற்பவர்க்
கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமும்உங்கள் சிங்கார
வீடும் மடந்தையரும்
சங்காத மோ? கெடு வீர்! உயிர்
போம்அத் தனிவழிக்கே. 59

சிந்திக்கி லேன்நின்று சேவிக்கி
லேன்தண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேன்ஒன்றும் வாழ்த்து
கிலேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி
லேன்உண்மை சாதிக்கிலேன்
புந்திக்கி லேசமும் காயக்கி
லேசமும் போக்குதற்கே. 60

---

59 பொங்கு ஆரம் - பொங்குகின்ற முத்துக்களை யுடைய. வங்காரம் - உலோகக்கட்டி - பொன். சங்காதமோ - துணையாகுமோ. 60 பொய்யை - நிலையாத வாழ்வை. காயம் - உடல். கிலேசம் - துயரம்.

வரையற் றவுணர் சிரமற்று
வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித்
தவா! பஞ்ச பூதமும்அற்
றுரையற் றுணர்வற் றுடலற்
றுயிரற் றுபாயம்அற்றுக்
கரையற் றிருளற் றெனதற்
றிருக்கும்அக் காட்சியதே. 61

ஆலுக் கணிகலம் வெண்டலை
மாலை; அகிலம்உண்ட
மாலுக் கணிகலம் தண்ணந்
துழாய்; மயில் ஏறும்ஐயன்
காலுக் கணிகலம் வானோர்
முடியும் கடம்பும்; கையில்
வேலுக் கணிகலம் வேலையும்
சூரனும் மேருவுமே. 62

---

61 வரை - கிரௌஞ்ச மலை. அவுணர் - அரக்கர். செற்ற - கோபித்த. போதித்தவா - போதித்தவாறு (என்னே). 62 ஆலுக்கு - ஆலமர் செல்வனாகிய சிவனுக்கு. வெண்டலை - தலையோடு. மேரு - கிரௌஞ்சம்.

பாதித் திருவுருப் பச்சென்
றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வேல
னைச்சென்று போற்றிஉய்யச்
சோதித்த மெய்அன்பு பொய்யோ ?
அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே
எனக்கிங்ஙன் சந்தித்ததே. 63

பட்டிக் கடாவில் வரும்அந்த
கா ! உனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவி
டேன் ; வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு
மாள்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டா ! சத்தி
வாள்என்றன் கையதுவே. 64

---

63 பாதி......பச்சென்றவர் - அர்த்தநாரீசுவரர். தன் பாவனையை - பிரணவத்திற்குத் தன் உரையை. 64 பட்டிக்கடா - எருமைக்கடா. சத்திவாள் - திருவருளாகிய வாள்.

வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங்
கூற்றன் விடுங்கயிற்றால்
கட்டும் பொழுது விடுவிக்க
வேண்டும் ; கராசலங்கள்
எட்டும் குலகிரி எட்டும்விட்
டோடஎட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்கும்
கலாப மயூரத்தனே. 65

நீர்க்கு மிழிக்கு நிகர்என்பர்
யாக்கை ; நில் லாதுசெல்வம்
பார்க்கும் இடத்தந்த மின்போலும்
என்பர் ; பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட என்னின்எங்
கேனும் எழுந்திருப்பார் ;
வேற்குமா றற்கன் பிலாதவர்
ஞானம் மிகவுநன்றே. 66

---

65 கராசலம் - மலைபோன்ற (திக்கு) யானைகள். புதைய - மறையும்படி. மயூரத்தன் - மயில்வாகனன் ; முருகன். 66 மின் - மின்னல். எங்கேனும் - எங்கே யாவது போக.

பெறுதற் கரிய பிறவியைப்
பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற்
றிலேன் ; மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம
சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா
சலபன் னிருபுயனே. 67

சாடுஞ் சமரத் தனிவேல்
முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை இருத்தவல்
லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண்
டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமாய்
இருக்கும் அதீதத்திலே. 68

---

67 கும்பம் - மத்தகம். கம்பம் - அசைதல். சங்க்ராமம் - போர். சரசவல்லி - தெய்வயானை. 68 உகம் - காலம். கவுரி - உமை. பவுரி - ஒரு நடனம். பரம் - மேல். அதீதம் - கடந்தநிலை.

தந்தைக்கு முன்னந் தனிஞான
வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி எனைத்தேற்
றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை என்செய்ய
லாம்? சத்தி வாள்ஒன்றினால்
சிந்தத் துணிப்பன் தணிப்பருங்
கோபத்ரி சூலத்தையே. 69

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள்; மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காஎனும்
நாமங்கள்; முன்புசெய்த
பழிக்குத் துணைஅவன் பன்னிரு
தோளும்; பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங்
கோடன் மயூரமுமே. 70

---

69 தந்தை - சிவன். தனி ஞானவாள் சாதித்தல் - ஒப்பற்ற பிரணவப் பொருளை மொழிதல். 70 பயந்த - அஞ்சிய; இறந்த. செங்கோடன் - திருச்செங்கோட்டிலுள்ள முருகன்.

துருத்தி எனும்படி கும்பித்து
வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி உடம்பை ஒறுக்கில்என்
னும்? சிவ யோகம்எனுங்
குருத்தை அறிந்து முகமா
றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தில் இருத்தும்; கண்
டீர்முத்தி கைகண்டதே. 71

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே. 72

---

71 துருத்தி - உலையூது கருவி. கும்பித்து - கும்பகம் செய்து நிறுத்தி. சிவயோகம் - ஆன்மாவின் அனுபவநிலை; சுத்தநிலை. 72 சேந்தன் - முருகன். காந்தன் - கணவன். கந்தம் - வாசனை.

போக்கும் வரவும் இரவும்
பகலும் புறம்பும்உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும்இல்
லாதொன்று வந்துவந்து
தாக்கும்; மனோலயந் தானே
தரும்; எனைத் தன்வசத்தே
ஆக்கும்; அறுமுக வா! சொல்
லொணுதிந்த ஆனந்தமே. 73

அராப்புனை வேணியன் சேயருள்
வேண்டும்; அவிழ்ந்த அன்பால்
குராப்புனை தண்டையந் தாள்தொழல்
வேண்டும்; கொடியஐவர்
பராக்கறல் வேண்டும்; மனமும்
பதைப்பறல் வேண்டும்என்றால்
இராப்பகல் அற்ற இடத்தே
இருக்கை எளிதல்லவே. 74

---

73 போக்கும் வரவும் - பிறப்பு இறப்புக்கள்.
74 அரா - பாம்பு. வேணி - சடை. குரா - ஒருவகை மலர். பராக்கு - பலவற்றைப் பார்த்துக் காலத்தைக் கழித்தல். இராப்பகல் அற்ற இடம் - மோட்சம்.

படிக்கின் றிலைபழ நித்திரு
நாமம் ; படிப்பவர்தாள்,
முடிக்கின் றிலை ; முரு காஎன்
கிலை ; முசி யாமல் இட்டு
மிடிக்கின் றிலை;பர மானந்த
மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலை;நெஞ்ச மே!தஞ்சம்
ஏது? நமக்கினியே. 75

கோடாத வேதனுக் கியான்செய்த
குற்றம்என்? குன்றெறிந்த
தாடாள னே! தென் தணிகைக்
குமர!நின் தண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத
கண்ணும் தொழாதகையும்
பாடாத நாவும் எனக்கே
தெரிந்து படைத்தனனே. 76

---

75 முசியாமல் - தளராமல். மிடி - வறுமை. தஞ்சம் - அடைக்கலம். 76 கோடாத வேதன் - நடுவுநிலை பிறழாத பிரமன். தாடாளனே - முயற்சி (செயல்) உடையவனே!

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப்
பயோதரம் சேரஎண்ணி
மால்வாங்கி ஏங்கி மயங்காமல்
வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்கும் களிற்றான்
கிழத்தி கழுத்திற்கட்டும்
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி
பூங்கழல் நோக்குநெஞ்சே. 77

கூர்கொண்ட வேலனைப் போற்றாமல்
ஏற்றங்கொண் டாடுவீர்காள்!
போர்கொண்ட காலன் உமைக்கொண்டு
போம்அன்று பூண்பனவும்
தார்கொண்ட மாதரும் மாளிகை
யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவர்? ஐயோ
கெடுவீர்! நும் அறிவின்மையே. 78

---

77 சேல்வாங்கு - கயல்மீனின் தன்மையைக் கவர்ந்த. பயோதரம் - கொங்கை. மால்வாங்கி - மோகங் கொண்டு. 78 ஏற்றம் - புகழ். பணச் சாளிகை - பணப்பை.

பந்தாடு மங்கையர் செங்கயற்
பார்வையில் பட்டுழலும்,
சிந்தா குலம்தனைத் தீர்த்தருள்
வாய்; செய்ய வேல்முருகா!
கொந்தார் கடம்பு புடைசூழ்
திருத்தணிக் குன்றில்நிற்கும்
கந்தா! இளங்குமரா! அம
ராவதி காவலனே. 79

மாகத்தை முட்டி வருநெடுங்
கூற்றன்வந் தால்என்முன்னே
தோகைப் புரவியில் தோன்றிநிற்
பாய்; சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந்
தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல்
யாணிதன் பாலகனே. 80

---

79 சிந்தாகுலம்-மனக்கவலை. கொந்து-கொத்து.
80 மாகம் - வானம். த்யாகப் பொருப்பு - அளவின்றி அளிக்கும் மலைபோன்ற வள்ளல். த்ரியம்பகன் - முக்கண்ணன். பாலகன் - குழந்தை.

தாரா கணம்எனுந் தாய்மார்
அறுவர்•தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பால்உண்ட
பாலன் அரையில்கட்டும்
சீராவும் கையில் சிறுவாளும்
வேலும்என் சிந்தையவே ;
வாரா தகல்;அந்த கா!வந்த
போதுயிர் வாங்குவனே. 81

தகட்டிற் சிவந்த [1]கடம்பையும்
நெஞ்சையும் தாள்இணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு
ளாய் ; புண்ட ரிகன்அண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர
லோகத்தை முட்டஎட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர
சூர பயங்கரனே. 82

---

81 தாராகணம் - நட்சத்திரக் கூட்டம் (கார்த்திகைப் பெண்கள்). சீரா - கவசம். 82 தகட்டில் - காய்ச்சிய தகடுபோல. புண்டரீகன் - பிரமன். நிட்டூர - சினமுடையவனே ! ப - ம்—[1] தண்டையும்.

தேங்கிய அண்டத் திமையோர்
சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள்
கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது
சூரன் தளம்; தனிவேல்
வாங்கி அனுப்பிடக் குன்றங்கள்
எட்டும் வழிவிட்டவே. 83

மைவருங் கண்டத்தர் மைந்த! கந்
தாவென்று வாழ்த்தும்இந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி
யேன்; கற்ற கல்வியும்போய்ப்
பைவருங் கேளும் பதியும்
கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும்
போ(து)உன் அடைக்கலமே. 84

---

83 தேங்கிய - நிறைந்த. கலாபப் புரவி - மயில் வாகனம். தளம் - சேனை. 84 கைவரும் - கைகண்ட; பழக்கமான. பைவருங்கேள்-துன்புறும் உறவினர். பதி - ஊரவர். மெய் - உடலினின்றும் (உயிர்).

காட்டிற் குறத்தி பிரான்பதத்
தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதல் மிகஎளி
தே; விழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார
நேர்அண்ட மூச்சைஉள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கும் ஓடாமல்
சாதிக்கும் யோகிகளே. 85

வேலா யுதன்சங்கு சக்ரா
யுதன்விரிஞ் சன்அறியாச்
சூலா யுதன்தந்த கந்தச்
சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோன்அரு
ளாய கவசம்உண்(டு);என்
பாலா யுதம்வரு மோ? யம
னோடு பகைக்கினுமே. 86

---

85 விழி நாசி வைத்து - மூக்கு நுனியில் பார்வையைச் செலுத்தி. மூலாதாரம் - ஆறு ஆதாரங்களில் ஒன்று. 86 சக்ராயுதன் - திருமால். விரிஞ்சன்-பிரமன். சூலாயுதன் - சிவன். காலாயுதம் - சேவல்.

குமரா ! சரணம் சரணமென்
றண்டர் குழாம்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள்
திருமுகம் ஆறுங்கண்ட
தமராகி வைகும் தனியான
ஞான தபோதனர்க்கிங்(கு)
எமராசன் விட்ட கடையேடு
வந்தினி என்செயுமே 87

வணங்கித் துதிக்க அறியா
மனித ருடன் இணங்கிக்
குணங்கெட்ட துட்டனை ஈடேற்று
வாய்;கொடி யும்கழுகும்,
பிணங்கத் துணங்கை அலகைகொண்
டாடப் பிசிதர் தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலாயு
தம்தொட்ட நிர்மலனே. 88

---

87 தமராகி - தம்மவராகி; அடியவராகி. தபோத னர் - முனிவர். கடையேடு - சாவோலை. 88 கொடி - காக்கை. துணங்கை - ஒருவகைக் கூத்து. அலகை - பேய். பிசிதர் - அரக்கர்.

பங்கே ருகன்எனைப் பட்டோ
லையிலிடப் பண்டுதளை
தங்காலில் இட்ட தறிந்தில
ஞே? தனி வேல்எடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ்
சிலம்பு புலம்பவரும்
எங்கோன் அறியின் இனிநான்
முகனுக் கிருவிலங்கே. 89

மாலோன் மருகனை மன்ருடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோ
டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்தில
னே! அந்த நான்முகனே. 90

---

89 பங்கேருகன் - பிரமன். பட்டோலை - குறிப்பெழுதும் ஓலை; கணக்கு ஓலை. பொங்கோதம் - அலைபொங்குங்கடல். 90 மன்ருடி - பொன்னம்பலத்தில் ஆடும் நடராசப்பெருமான்.

கருமான் மருகனைச் செம்மான்
மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக்
கோளனை வானம்உய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல
னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை
வாழ்த்துகை சாலநன்றே. 91

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக்
கும்சுத்த ஞானம்எனும்
தண்டையம் புண்டரி கந்தரு
வாய்; சண்ட தண்டவெம்சூர்
மண்டலம் கொண்டுபண் டண்டர்அண்
டங்கொண்டு மண்டிமிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல்
வேல்தொட்ட காவலனே. 92

---

91 கருமால் - திருமால். செம்மான் மகள் - வள்ளி. மாகுலவன் - வேடன். பொரு மா - மாமர வடிவில் வந்த சூரபதுமன். 92 சண்டதண்டம் - வேகமும் வலியுமுடைய சேனை. மண்டிமிண்ட - தாக்கி நெருங்க.

மண்கம ழுந்தித் திருமால்
வலம்புரி ஓசை அந்த
விண்கமழ் சோலையும் வாவியுங்
கேட்டது ; வேல்எடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும்
பிள்ளைத் திருஅரையில்
கிண்கிணி ஓசை பதிறு
லுலகமும் கேட்டதுவே. 93

தெள்ளிய ஏனலில் கிள்ளையைக்
கள்ளச் சிறுமிஎனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட்
டிலை ; சிறு வள்ளை தள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத்
தோதகச் சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார
மூரலை வேட்டநெஞ்சே. 94

---

93 மண்கமழ் - பூமியை உண்டதனால் மண் வாசனை கமழும். வலம்புரி - சங்கு. வாவி - குளம். கிண்கிணி - ஒரு ஆபரணம். 94 வள்ளை - கொடி. தோதகம் - வஞ்சகம் வித்தாரம் - மிகுதி.

யான்தான் எனும்சொல் இரண்டுங்கெட்
டால்அன்றி யாவருக்கும்
தோன்றாது சத்தியம் ; தொல்லைப்
பெருநிலம் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்
க்ருபாகரன் கேள்வியினால்
சான்றாரு மற்ற தனிவெளிக்
கேவந்து சந்திப்பதே. 95

தடக்கொற்ற வேள்மயி லே! இடர்
தீத்தனிவிடில்நீ
வடக்கில் கிரிக்கப் புறத்துநின்
தோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்தும் கதிர்க்கப்
புறத்தும் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்தும் திசைக்கப்
புறத்தும் திரிகுவையே. 96

---

95 சூகரம் - பன்றி. கீன்றான் - பூமியைக் கிளரியவனாகிய திருமால். 96 வேள் - முருகவேள். வடக்கிற் கிரி - மேருமலை. கனகம் - பொன். சக்ரத் திடர் - சக்கிரவாளகிரி.

சேலில் திகழ்வயல் செங்கோடை
வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணாமுடி
தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலில் கிடப்பன ; மாணிக்க
ராசியும் காசினியைப்
பாலிக்கு மாயனும் சக்ரா
யுதமும் பணிலமுமே. 97

கதிதனை ஒன்றையுங் காண்கின்றி
லேன்; கந்த! வேல்முருகா!
நதிதனை அன்னபொய் வாழ்வில்அன்
பாய்நரம் பால்பொதிந்த
பொதிதனை யும்கொண்டு திண்டாடு
மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேஎன்
றன்மனம் வேகின்றதே. 98

---

97 கலபி - மயில். பணாமுடி - பாம்பின் படம். ராசி - குவியல். காசினி - உலகம். பணிலம் - சங்கு. 98 நதிதனை அன்ன - மேடும் பள்ளமும் போன்ற நதியைப் போல. நரம்பால் பொதிந்த பொதி - உடல்.

காவிக் கமலக் கழலுடன்
சேர்த்தெனைக் காத்தருளாய்;
தூவிக் குலமயில் வாகன
னே! துணை ஏதும்இன்றித்
ாவிப்படரதக் கொழுகொம்
பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி
வாடிப் பதைக்கின்றதே. 99

இடுதலைச் சற்றும் கருதேனைப்
போதமி லேனைஅன்பால்
கெடுதல் இலாத்தொண் டரிற்கூட்
டியவா கிரெளஞ்சவெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன்
பிறவி அறஇச்சிறை
விடுதலைப் பட்டது! விட்டது
பாச வினைவிலங்கே. 100

---

99 காவிக் கமலம் - செந்தாமரை. தூவி - மயில் இறகு. 100 இடுதலை - தானம் செய்வதை. போதம் - அறிவு. கூட்டியவா - கூட்டியவாறு (என்ன வியப்பாயிருக்கிறது). சிறை - சிறையினின்று.

நூற்பயன்

சலங்காணும் வேந்தர் தமக்கும்அஞ்
சார்; யமன் சண்டைக்கஞ்சார்;
துலங்கா நரகக் குழியணு
கார்; துட்ட நோய்அணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும்; கந்தன் நன்னூல்
அலங்கார நூற்றுள் ஒருகவி
தான்கற்(று) அறிந்தவரே.

கந்தர் அலங்காரம்

முற்றிற்று

சலம் - சலனம்; கோபம். கந்தன் நன்னூல் அலங்காரம் - கந்தர் அலங்காரம்.

சில பிரதிகளிலே
அதிகமாகக் காணப்பட்ட பாக்கள்

திருவடி யும்தண்டை யும்சிலம்
புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலும் கடம்பும்
தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்கள்
ஆறும் மலர்க்கண்களும்
குருவடி வாய்வந்தென் உள்ளங்
குளிரக் குதிகொண்டவே. 1

இராப்பகல் அற்ற இடங்காட்டி
யான் இருந் தேதுதிக்கக்,
குராப்புனை தண்டையந் தாளரு
ளாய்; கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற
நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல! நிருதசங்
கார! பயங்கரனே. 2

---

1 வடி - கூர்மை. மரு - அழகு. 2 கரி - கஜேந்திரன் என்னும் யானை. கரா - முதலை. கரி-திருமால்

செங்கே ழுடுத்த சிவனடி
    வேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு
    தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளம் சொரியும்செங்
    கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேஎன்
    முன்வந் ததிர்நிற்பனே. 3

ஆவிக்கு மோசம் வருமா
    றறிந்துன் அருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி
    லேன்; வினை தீர்த்தருளாய்;
வாவித் தடவயல் சூழுந்
    திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே!
    அமர சிகாமணியே. 4

---

3 செங்கேழ் - செந்நிறம். தரளம் - முத்து. செங்கோடை - திருச்செங்கோடு என்னும் தலம். எங்கே - எவ்விடத்தேனும் இருந்து. 4 ஆவி - உயிர். வாவி - நீர்நிலை.

கொள்ளித் தலையில் எறும்பது
போலக் குலையும்என் றன்
உள்ளத் துயரை ஒழித்தரு
ளாய்ஒரு கோடிமுத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடற்செந்தில்
மேவிய சேவகனே !
வள்ளிக்கு வாய்த்தவ னே ! மயில்
ஏறிய மாணிக்கமே. 5

சூலம் பிடித்தெம பாசம்
சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்கொரு காலும்அஞ்
சேன் ; கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான்
குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையும் உண்டே
நமக்கொரு மெய்த்துணையே. 6

---

5 முத்தம் முத்து. செந்தில் - திருச்செந்தூர்.
6 காலன் - யமன். ஆலம் - விஷம். மெய்த்துணை - மேலான பாதுகாப்பு.

உ

செந்திலாண்டவன் துணை

தோத்திரம்

முருகன்

பரமனுதல் விழியிலுதித்(து) அந்தரமே
ளிமிர்ந்து பகிரதியில் தவழ்ந்துநிறை பன்னீருங்
குடித்துச், சரவணத்தொட்டிலின்ஏறி அறுவர்முலை
யுண்டு சங்கரியின் மடியிலிருந்(து) ஓமெனுஞ்சொற்
பேசி, அரன்மலையின் நின்(று)எவையும் படைத்(து)
அலைவாய் நடந்தங்(கு) அசுரர்தமைத் தொலைத்(து)
அமரர்ப் புரந்(து)உலகை வலம்வந்(து), இரவிசத
கோடிஎனத் தணிகைஅமர்ந்(து) அருளும் எழில்
ஞான சத்திதரன் இணையடிஏத் தெடுப்பாம். 1

—திருத்தணிகைப் புராணச் சுருக்கம்.

வேல்

பாலயிலுங் குழவிஎனப் பாரிலுதி யாமற்
பாறையினுங் கடியமனப் பாவையர்மால் உறுமற்,
சேலயிலுங் கொக்கெனவெந் தீமைபுரி யாமற் சேனை
யிலும் யானையிலும் சிந்தனைவை யாமற், சூலையிலும்

நமன்தூதர் வாதையிலும் படாமற் சூறையிலுங் கொடியமனஞ் சுழன்று திரியாமற், காலயிலும் பாம் பயிலுங் கார்மயிலை உகைத்தோன் கையயிலை மாலையினுங் காலையினும் பணிவாம். 2

— திருத்தணிகைப் புராணச் சுருக்கம்.

சேவல்

மஞ்சேவல் கொளுமகவான் வந்(து)ஏவல் புரிய மகிதலமும் ஏவல்கொளும் மாசூர பன்மன், நெஞ் சேவலெனப்பிளந்து நிணங்கொறித்துச் சொரிசெந் நீரருந்திக் கொக்கரித்து நிலவுலகம் அனைத்தும், உஞ் சேவல் செய்யஇரு சிறைநீழல் பரப்பி உவந்தேவல் விரைந்துகுகன் உயர்வலக்கை அமருஞ், செஞ்சேவற் கொடிக்(கு)அடியேன் தினமேவல் புரியத் தீவினையும் என(து)ஏவல் திறத்தின் அகன்றிடுமே. 3

—திருத்தணிகைப் புராணச் சுருக்கம்.

மயில்

அருமையிலை ஒருபொருளுக்(கு) அடிமையிலை பிறருக்(கு) அந்தகனுக்(கு) ஆண்மையிலை அடியேன் பால் வருதற்(கு), எருமையிலை சிறுமையிலை இன்மையிலை பகைஞர்க்(கு) எளிமையிலை மடமையிலை இழிதகைமை இலைநோய், பொருமையிலை வறுமையிலை

பொய்ம்மையிலை பிறவிப் புன்மையிலை தீமையிலை பொறுமையிலை; மகவான், தருமயிலை வனயயிலை மணந்ததிருத் தணிகைச் சண்முகனார் உவந்தேறுந் தணிமயிலைத் தொழுவே. 4

—திருத்தணிகைப் புராணச் சுருக்கம்,

தெய்வயானையம்மை

வார்கொண்ட கொங்கையெனுங் கோடு தன்னால் வடிவேலர் பன்னிருதோள் வரையைப் பாய்ந்து, தார்கொண்ட கடம்பதனை உழக்கி யோகத் தண்பரவை படிந்திறைவர் தடங்கண் வண்டின், போர்கொண்ட விழிக்கருணை மதத்தை யூற்றிப் பொருபடையாய் என்வினையைப் பொடித்து நாளும், பார்கொண்ட பரங்கிரிவாழ் தெய்வயானை பதமலரை இதயமலர் பதித்து வைப்பாம். 5

—திருப்பரங்கிரி புராணம்.

வள்ளியம்மை

மணிகொண்ட மானிடத்து முளைத்து வேடர் மனைபதிந்து பசுந்தழையாய் மருவுஞ் சோதி, அணிகொண்டு தழைந்தருளிக் கொழுகொம் பாக அமலர் புயந் தழுவிவெள்ளி அசல மேறிக், கனிகொண்ட புகழ்பூத்(து)என் வினையைக் காய்த்துக் கவின்பழுத்

துக் கண்டவர்க்குக் கருணை யூற்றிப், பணிகொண்ட
வள்ளியெனுங் கொடி என் உள்ளப் பங்கயத்தைச்
சுற்றியிடப் பதித்து வாழ்வாம். 6

—திருப்பரங்கிரி புராணம்

நவவீரர்

பரையின் நூபுர மணிகளிற் பிறந்திடும் பாலர்
பொருவில் சூரனைக் கிளையொடும் பிடுங்கிய புயத்தர்
முருக வேள்அடி நிழலெனப் பிரிந்திடா முறையோர்
விருது மேவிய நவமெனும் வீரரைப் பணிவாம். 7

—திருப்பரங்கிரி புராணம்

வீரவாகு தேவர்

வடுத்தமா இருபிள வாகச் சோதிவேல்
விடுத்தவா னவன்அடி விடாது போற்றியே
அடுத்தவா னவர்சிறை அகற்றச் செம்மணி
கொடுத்தவாள் வீரவா குவைவ ழுத்துவாம். 8

—திருச்செந்தூர்ப் புராணம்

பொது வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க ;
அறுமுகம் வாழ்க ; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க ;
குக்குடம் வாழ்க ; செவ்வேள்

ஏறிய மஞ்ஞை வாழ்க;
யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க;
வாழ்கசீர் அடியார் எல்லாம். 9

—கந்த புராணம்.

அநுபவப் பயன்

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார். 10

—பெரிய புராணம்.

சிட்டி பிரஸ், திருச்சிராப்பள்ளி.

15	9-ஆம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு ...	0	9
16	சுந்தரர் தேவாரம் ...	1	0
17	திருநாவுக்கரசர் தேவாரம் ...	1	0
18	திருவாசகம் ...	0	4
19	அம்மையார் அற்புதத் திருவந்தாதி ...	0	4
20	முதுமொழி மேல்வைப்பு ...	0	12
21	திருஞானசம்பந்தர் தேவாரம் ...	2	8
22	பதினோராந் திருமுறை ...	1	4
23	நீதிநெறி விளக்கம்—ஆங்கிலம் ஹிந்தி மொழி பெயர்ப்புகளுடன் ...	0	8
24	பெரிய புராணம் ...	2	8
25	திரு மந்திரம் ...	1	8
26	திருவிளையாடற் புராணம் (அச்சில்)		

இடைக்குமிடம்:

T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L., வக்கீல்,

மானேஜிங் டிரஸ்டி,

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்,

ஸ்ரீவைகுண்டம். (திருநெல்வேலி ஜில்லா)

"குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

ஸ்ரீ வைகுண்டம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து
விரோதி ஆண்டு தை மாதம் முதல்
மாதந்தோறும் வெளிவருகிறது

★

இது
சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
பிரபந்தம், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி,
இலக்கியம், பிற மொழிகள் கலாசாரம்
சம்பந்தமான கட்டுரைகள் கொண்டது

★

T. M. குமரகுருபரன் பிள்ளை, B.A., B.L., வக்கீல்
நிர்வாக ஆசிரியர் 'குமரகுருபரன்'
மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்
ஸ்ரீவைகுண்டம்

வருட சந்தா ரூ 1–8–0 தனிப்பிரதி 0–2–0

சிட்டி பிரஸ், மதுரை ரோடு, திருச்சி.